1989 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் பல சட்டங்கள் இருக்கின்றன. இந்துக்களுக்கு ஒரு சட்டம் இருக்கிறது. முஸ்லீம்களுக்கு என்று ஒரு சட்டம் இருக்கிறது. முஸ்லீம்கள் 5 குடும்பங்களைக் கூட வைத்துக் கொள்ளலாம் என்று. (குறுக்கீடு). 4 குடும்பங்களை வைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. இந்தக் குடும்பங்களை எத்தனை வைத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றி இப்போது உணவு இலாகா பரிசீலித்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால் எங்களுக்கு இருக்கிற கவலை எல்லாம் அந்த எண்ணிக்கையைப் பொறுத்துத்தான். இந்துக்களிலேயே கூட முதல் மனைவி ஒப்புதல் தருவார்களேயானால் இரண்டாவது திருமணம் செய்து கொள்ள எந்தவிதமான தடங்கலும் இல்லை. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே அதிகமான " Point of Order " எல்லாம் வேண்டாம். ரொம்பப் பேருக்கு " Order " சரியாகத்தான் இருக்கிறது. (சிரிப்பு). திரு. உ. ரா. வரதராசன்

(ஆ) ஆந்திர மாநில சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சி குறித்து.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டப் பேரவையினுடைய உரிமை, அவைத் தலைவருடைய உரிமை சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையை நான் இங்கே அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதிலே உச்ச நீதிமன்றம் சம்பந்தப்பட்டிருப்பதினாலே அதைப் பற்றி பேசுகிறபோது கடைப் பிடிக்கவேண்டிய எச்சரிக்கையோடு தான் நான் இந்தப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். ஆந்திர மாநில சட்டமன்றப் பேரவையிலே ஒரு நிகழ்ச்சி. அதனுடைய விவரங்களுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. அது சம்பந்தமாக பேரவை ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி அதை அமல்படுத்துகிறது. இந்தப் பிரச்சினை ஆந்திர மாநிலத்தினுடைய உயர்நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு....

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உள்ளீடாக ஒரு கருத்தை வைத்துக் கொண்டு பேசும்போது, அந்தக் கருத்து எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அந்தக் கருத்து இந்த அவையிலே உள்ளவர்களுக்கு எல்லாம் திட்டவட்டமாகத் தெரியாது. ஆகவே உள்ளீடாக ஒரு கருத்தை வைத்து அந்த அடிப்படையில் ஒரு கருத்தை இந்த அவையிலே எழுப்புவதற்கு தாங்கள் அனுமதிப்பது முறையல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உ. ரா. வரதராசன் அவர்கள் உட்கார வேண்டும். தாங்கள் எழுப்பிய சிக்கல் குறித்து

நாங்களும் படித்தோம். என்றாலும் நம்முடைய தமிழகச் சட்ட மன்றப் பேரவைத் தலைவருக்கு அத்தகைய சிக்கல் ஏதும் கிடையாது. அப்படிச் சிக்கல் ஏதும் வருமானால் அது பற்றி இந்த அவை ஆராயும்.

(இ) தெலுங்கு கங்கைத் திட்டம் பற்றி ஆந்திர மாநில திட்டக் குழுத் தலைவர் பேசியுள்ளது குறித்து.

திரு. அ. இரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை நகரத்தினுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த தெலுங்கு கங்கை திட்டம் சம்பந்தமாக நம்முடைய அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டு இருப்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஏற்கெனவே ஒப்பந்தபடியும் 47 கோடி ரூபாய் கொடுத்து அது வட்டி இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு பத்திரிகையிலே ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஒரு திட்டக் குழுத் தலைவர் அவர்கள், ஒரு பொறுப்பான பதவியிலே இருக்கக் கூடியவர்கள், தமிழக அரசு தர வேண்டிய பணத்தை ஒப்பந்தப்படி தராத காரணத்தினாலே கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வராது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. ஆகையினால் அரசின் சார்பாக இது குறித்து என்ன விளக்கம் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தெலுங்கு கங்கைத் திட்டம் குறித்து இப்போது என்ன நிலவரம் என்பதைப் புதியதாகப் பொறுப்பேற்றுள்ள எங்களுக்கு முழுமையாக எதுவும் தெரிவதற்கு நியாயம் இல்லை. எனவே நான் தமிழக அரசினுடைய முக்கியமான அதிகாரிகளை எல்லாம் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். நம்முடைய சட்டமன்ற கூட்டத் தொடர் முடிந்தவுடன் ஒரு தேதி குறிப்பிட்டு ஆந்திராவிற்குச் சென்று அங்குள்ள அதிகாரிகளோடு கலந்து பேசி என்ன நிலவரத்திலே இப்போது தெலுங்கு கங்கைத் திட்டம் இருக்கிறது, எந்தெந்த நிலைகள் நிறைவு செய்யப்பட்டால் உடனடியாகச் சென்னைக்கு தெலுங்குகங்கைத் திட்டத்தினுடைய தண்ணீரைக் கொண்டுவர இயலும் என்பவைகளைப் பற்றியெல்லாம் பேசி முடித்து என்னிடத்திலே விவரம் அளிக்க வேண்டும் என்றும் அந்த விவரங்களின் அடிப்படையில் நான் ஆந்திர முதல்வர் அவர்களைச் சந்தித்து—அதற்கு ஒரு நேரம் குறிக்கப்பட்டு—அவரோடு கலந்து பேசி விரைவில் அந்தத் திட்டத்தை சென்னை மாநகருக்குக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ள இருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.